CELEBRATING 25 YEARS TCAV

# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

# விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம்

Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015

## நத்தார் வெளியீடு செய்திமடல் Dec 2012 Newsletter Chrstmas Edition

## TCAV ANNUAL CHRISTMAS FESTIVAL 2012

**SUNDAY 16TH DECEMBER 2012 AT 4.00PM**

**ST.ANDREW'S CHURCH, 76 SPRINGS ROAD, CLAYTON SOUTH**

**CHRISTMAS MASS IN TAMIL AT 4.00PM FOLLOWED BY CHRISTMAS CELEBRATION**




Admission Free

All Are Welcome

Dinner Sponsored by TCAV

A Fun Filled Fellowship Evening

Christmas Carols

Kids' Activities & Games

Adults Trivia & Cake Stall

American Auction

Mini Raffle Draw etc.

TCAV

worship - fellowship - friendship

வழிபாடு - ஐக்கியம் - தோழமை

## CAKE & SWEET STALL (PRICE $3 – $7 ONLY)

TCAV LADIES AUXILIARY GROUP IS ORGANISING A CAKE & SWEET STALL TO RAISE FUNDS TO CONDUCT WORKSHOPS FOR OUR LADIES AND YOUNG ONES.

TO SUPPORT OUR LADIES, PLEASE BRING CAKE–SWEETS TO SELL AND RAISE FUNDS

## New Year Mid Night Mass

Tamil Mass & Fellowship

**31st December 2012 at 11.30 pm.**

St.Paschal Seminary

100 Albian Road, Box Hill 3128

Mel Ref. 47 F11




**இந்த இதழின் உள்ளே...**

**Inside this issue...**

ஆசிரியர் குழு செய்தி -
தலைவரின் சந்திப்பு -
வெள்ளி விழா நிகழ்வுகள் -
ஆன்ம குருவானவின் செய்தி -
Cappuccino குடிப்போம்.. -
Our Plans for this year -
கிறீஸ்தவமும் வழிபாடும் -
TCAV Kid Zone -
TCAV Youth -
TCAV Woman -

## TCAV MINI RAFFLE

**ON SALE NOW**

*Proceeds from this project will be used for TCAV Community projects*

***Only $2.00 per Ticket***

***Hurry few weeks left***

***DRAW ON 16 December 2012***

*1st Prize: Two Return Air Tickets to Singapore*

*2nd Prize: Two Return Air Tickets to Gold Coast*

*3rd Prize: Two Return Air Tickets to Sydney*

*4th, 5th and 6th Consolation prizes: $100 Gift Vouchers*

## நம்பிக்கை ஒளி தருகிறது...

❄ எமது இளவேனிற் கால செய்தி மடல் தொகுக்கப்பட்ட விதம் மற்றும் வடிவமைப்பு எமது உறுப்பினரிடையே உற்சாக விமர்சனங்களை ஏற்படுத்தியதில் மட்டற்ற மகிழ்ச்சி. ***இது புதிய நம்பிக்கை!***

❄ எமது அங்கத்தவரில் சிலர் தாமாகவே முன்வந்து இந்த செய்தி மடலின் ஆக்கவேலைகளில் பங்கெடுப்பதும், ஏன் சிலர் அதன் தாயாரிப்புச் செலவிலே தாங்களும் சிறு துளிகளாக இருக்கிறோம் என்கின்ற போதும் புதிய அம்சங்கள் வரவேண்டும் என வாதம் செய்யும் போதும் ***ஒரு நம்பிக்கை உறுதியாகிறது!***

❄ Child Abuse & Royal Commission மூலமாக“கத்தோலிக்கர் நாம் எல்லாம் சந்திக்கு வந்துவிடுவோம்.. சாக்கடை வாடை பாடை வரை போகும்...” என்றெல்லாம், இறுமாப்பு பேசிக் கொண்டிருந்த கூட்டமெல்லாம், இந்த விசாரணை.. எல்லா மதங்களுக்கும், சமூக சேவை அமைப்புகளுக்கும் பொதுவாக நடைபெறும் என்பதை அறிந்தவுடன், வாலை சுருட்டிக்கொண்டு அடக்கி வாசிக்கிறது. எமது கத்தோலிக்கம் இந்த சாபத்தில் இருந்து விடுபட Royal Commissionஐவிட சிறந்த விமோசனம் எமக்கு இல்லை என்பதை நினைக்கும் போது தொண்டைக்குள் இறுக்கம் இருந்தாலும் ***இதயத்தில் நிம்மதிப் பெருமூச்சோடு நம்பிக்கை பிறக்கிறது!***

❄ நத்தார் சுவாசக்காற்று கார்த்திகை மாதத்திலேயே வீச, Hampers & Kris Kringle, அங்காடிகள் கொள்முதல், புத்தாடை நண்பர்கள், அலுவலக விருந்து என நாட்கள் நத்தாரை நோக்கி நெருங்குவதும் தனி இன்பமே. புதிய ஆண்டும் புதிய திட்டங்களும் எமது ***நாளைய வாழ்வுக்கு நம்பிக்கை ஒளி தரும்!***

❄ கவலையே இல்லாமல் கொண்டாடுங்கள், அநுபவியுங்கள். முழு வருடத்திற்கும் கிடைக்கும் சிறந்த ஒரு விடுமுறை இது அல்லவா...? அதே நேரம், வாழ்வைத் தொலைத்து நிற்கும் நம் உறவுகள், அகதிகள், விதவைகள் பற்றி சிந்தியுங்கள்... முடிந்தால் நண்பரோடு கலந்துரையாடுங்கள் நம்மில் சிலருக்கு... “அட நான் மறந்து விட்டேனே,.. இந்த வருடம் எனது தர்ம கணக்கில் கொஞ்சம் காசு மீதாகியிருக்கிறதே.. இதை, வருட முடிவுக்குள் நல்ல ஒரு காரியத்துக்கு கொடுத்து விடவேண்டும்” என்று நினைவு வரும்போது,..

***நம்பிக்கை ஒளிவரும் எமக்கல்ல .... தவிக்கும் நம் உறவுகளுக்கு!***

❄ நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் !!

**<u>செய்தி மடல் ஆசிரியர் குழு</u>**



*Cappuccino*

## குடிக்கலாம் வாறீங்களா..

Christmas Edition 2012

**Your say and your view... A section for open chat**

**உங்கள் பார்வைகளும், விமர்சனங்களும்... உரையாடல் பகுதி**

Please send your comments and views via e-mail or SMS to us



Email - tcavinfo@gmail.com

SMS only - 0468 771 015

❄ வெள்ளிவிழாக்கொண்டாடங்களின் வடிவமைப்பும், நடைபெற்ற விதமும் ஒரு தனி தன்மை. ஆயர்களின் கூட்டுத்திருப்பலியும் – பாடல் தெரிவுகளும், குழுவும் சிறப்பு அம்சம். “ரோமிலே நீ நிற்கும்போது ரோமையனாகவே இருந்து விடு” எனற முதுமொழியை ஒத்து நின்ற எமது வெள்ளி விழா, பழைய தலைவர்களையும் ஏன் புதிய செயற்குழு அங்கத்தினரைக்கூட பெருமிதப்படுத்தியது. வாழ்த்துக்கள்.

*– ஜூட் & ஷிரானி*

❄ மாதத்தின் முதல் வெள்ளி மெல்பனில் தமிழில் பூசை ஒப்புக்கொடுக்க கிடைப்பது அரும் பாக்கியம். ஆனால் இது எமது குருக்களுக்கு சாத்தியப்படுமோ தெரியாது. அடுத்த வருடத்திலிருந்து ஒவ்வொரு மாதத்திலும், முதல் சனிக்கிழமையாவது குடும்பங்களுக்காகவும், நோய்வாய்பட்டவர்களுக்காகவும் ஒரு விசேட பூசைகயை ஒழுங்கு செய்ய முடியுமா? எங்கள் “எப்பிங் பங்கு” ஆலயத்தில் இந்த நாளில் திருப்பலி இருக்காது. இந்த ஆலயத்தைக்கூட பாவிக்கலாம்.

*– ஷாமின்*

❄ நடைபெற்ற TCAVயின் வெள்ளி விழாவில் எமது முதல் ஆன்ம குருவை காணவில்லை! ஒருவேளை நீங்கள் அவரை அழைக்க மறந்து விட்டீர்களோ என கேள்வி எழுப்பிய எனக்கு, அருட்திரு ஞானராஜா அவர்களின் வரமுடியாமை e-mail பற்றி கூறி, அதற்குரிய பதிலையும், சில நாட்களுக்குள்ளேயே, அவரிடமே பெற்று என்னையும் தொடர்பு கொண்டு விளக்கம் அளித்தது என் நெஞ்சை தொட்டது. எமது TCAVயின் தரம் இங்கே மிகவும் உயர்ந்து நிற்கிறது.

*– டெனிஸ். M*

❄ இந்தியா – வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் பக்தர்கள் தங்குவதற்காக கட்டபட்டுள்ள மண்டபங்களை பல நாடு – சமூகத்தாரும் தங்கள் நினைவாக கட்டிவிட்டுள்ளார்கள். திருவிழாக் காலங்களில் இதன் தேவை மிக அதிகமாகவே இருப்பதாக ஆலய நிர்வாக (Rector) குருவானவர், கதைக்கும்போது கூறினார். ஏறக்குறைய $10 – $15 ஆயிரம் டொலர்களில் கட்டிமுடிக்கக்கூடிய இந்த சமூகக்கூடம் பல்லாயிரக் கணக்கான மக்களின் தேவையை திருப்தி படுத்தும் அதே வேளையில் எமது TCAVயையும் நினைவுகூறும். முடிந்தால் முயற்சியுங்கள்.

*– ஜோன். P*

**OUR CHRISTMAS PARTY AMERICAN AUCTION NEED GIFTS**
**WE ARE LOOKING FOR GIFT HAMPERS, PL. HELP US**




# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

P.O.BOX 481, ROSANNA, VICTORIA 3084, AUSTRALIA

A.B.N. 57 010 334 854 APPROVED CHARITABLE ORGANISATION VCGLR 58755

Email – tcavinfo@gmail.com SMS only - 0468 771 015

CELEBRATING 25 YEARS TCAV

சந்திப்பு... In touch...


கிறிஸ்த்துவில் நிலைத்திருக்கும் அன்பின் சகோதர சகோதரிகளுக்கு என் தமிழ் வணக்கங்கள்.
25வது வருட வெள்ளிவிழா விமர்சையாக நடந்து முடிந்துவிட்டது. இனி நத்தார்கால, தவக்கால திட்டமிடல் தயாராகிறது. உங்களை இந்த இரண்டாவது மடல் மூலமாச சந்திப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். **சந்திப்பு என்பது எனக்கு மட்டும் தானா?**

என்னோடு கூடே நின்று தோள் கொடுக்கும் எனது சக குழு உருப்பினரையும் நீங்கள் சந்திக்க வேண்டும் என்பதே என் நோக்கம். இந்த செய்தி மடலில் உப தலைவர் திரு. ஜோதி ஃபீலிக்ஸ் அவர்களையும் செயற்குழு அங்கத்தவர் திரு. ஜேம்ஸ் ஆனந்தராஜன் அவர்களையும் சந்திக்கிறீர்கள். எமது அடுத்த தவக்கால இதழில் உப செயலாளர் திரு. கொட்வின் சேவியர் அவர்களையும் செயற்குழு அங்கத்தவர் திரு. கொர்னேலியஸ் அவர்களையும் செய்தி மடலினூடாக சந்திப்பீர்கள்.

பொதுவாக தலைவரின் சிந்தனைப்பகுதியில் இந்த செயற்குழுவின் நடப்பு வருடத்துக்கான போக்கு மற்றும் நெறியாள்கை பற்றிய விளக்கங்களை அங்கத்தவர்கள் எதிர்பார்ப்பது வழக்கம். ஆகவே இந்த மடலில் அடுத்து வரும் பக்கங்களில் ஒரு பக்க செய்தியை ஆங்கிலத்தில் இணைத்திருக்கிறேன். இது எமது செயற்திட்டங்கள் பற்றிய தெளிவை NGOsக்கும் உங்களுக்கு கொடுக்கும் என நம்புகின்றேன்.

**Please refer next page for President's *Christmas Message under TCAV Tamil Affairs,* in English.**

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் இனிய 2013 புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.
**எலாடியஸ் பர்னாந்து (தலைவர்)**

அன்பின் சகோதர-சகோதரிகளே,

கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்கு நம்மை தயாரிக்கும் இந் நேரத்தில் என் சிந்தனையில் தோன்றிய சில கருத்துக்கள் இதோ உங்களுக்காக...

நம்மை நல்முறையில் நடத்திவரும் நேசனுக்கு முதலில் நன்றி கூறுவோம் உறவினர்களோடும், நண்பர்களோடும் நமது சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ளும் நேரத்தில்,...

தனித்து இருக்கும், மனதில் பலமின்றி தவிக்கும் சில உள்ளங்களை நினைவு கூர்வோம், அவர்களுக்காக நாம் என்ன செய்யலாம் என சிந்திப்போம். தங்களைத் தாழ்வாக நினைக்கும் அவர்களை தைரியபடுத்துவோம். நம்மால் முடிந்தவரை அவர்களுக்கு சந்தோஷத்தை தரும் சந்தர்ப்பத்தை வழங்குவோம்.
உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவும் சமூக சேவைகளில் இயன்ற வரை பங்கு கொள்வோம். நமது மனதிற்கும், உடலுக்கும், ஆன்மாவிற்கும் பலம் கொடுக்கும் "ரகசிய மருந்து" அது என்பதை புரிந்து கொள்வோம்.

இறைவன் சொன்ன வார்த்தைகளை மறைமுகமாய் நாம் நிறைவேற்றும் போது, நம் ஆண்டவர் நமக்கு மேலான செல்வத்தை இம்மையிலும், மறுமையிலும் நமக்கும், நம் சந்ததிக்கும் பெருமிதமாய் அளிப்பார்

உங்கள் அனைவருக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துக்களையும், மலரும் 2013 புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
அன்பில் உங்கள
**பிரிய ஜோதி ஃ பெலிக்ஸ்** (உப-தலைவர்)

அன்பான TCAV நன்பர்களுக்கு என் வணக்கங்கள்,

இலங்கையை விட்டு ஏறக்குறைய 20வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து இலன்டன்-அவுஸ்திரேலியா என குடி பெயர்ந்து வந்திருந்தாலும், மண்ணின் மனமும், பண்படுகளும் என்னை ஒட்டியே நிற்கிறது.

என்னையும் என் உறவுகளையும் இந்த அவுஸ்திறேலிய மண்ணில் இரச்சித்து வைத்திருக்கும் என் ஆன்டவருக்கு நன்றி சொல்லும் அதே வேளையில் சமூக சிந்தனையோடு ஏதேனும் செய்ய வேண்டும் அன்ற ஆவல் என் உள் உணர்விலே ஓடிக்கொண்டே இருந்தது.

கால ஓட்டம்-வேலை-பொறுப்புக்கள் என பல்வேறு சிக்கல்கள். யாருக்குத்தான் நேரம் இருக்கிறது? ஆனாலும் ஒரு உறுத்தல். அதன் விளைவே இந்த வருடம் நான் TCAVயில் செயற்குழு அங்கத்தவராக இனைந்தது.என் சிந்தனை-செயல்-உணர்வு (same-wave length) நிலையிலே இருக்கும் சக அங்கத்தவர்களை TCAVயில் சந்தித்தபோது இன்னும் மகிழ்ச்சி.

புதிய அநுபவம்- எமது தாயக உறவுகளுக்கு நாம் செய்ய வேண்டிய தேவைகள், மெல்பன் தமிழ் கத்தோலிக்கரின் ஆன்ம தேவைகள் என பல விடயங்களை TCAVயில் ஆராய்கிறோம். மிகச்சிறிய குழு! பல பொறுப்புகள்! ஆனாலும் சமூகத்துக்கு செய்தோம் என்ற மனநிறைவு கிடைக்கிறது! நீங்களும் முடிந்தால் இணையுங்கள். வரப்போகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவிற்கும், புத்தாண்டுக்கும் எனது முன்கூட்டிய வாழ்த்துக்கள். நன்றியுடன்....
**ஜேம்ஸ் ஆனந்தராஜன்** (செயற்குழு உறுப்பினர்)

**We are proud to present our Silver Jubilee Year 2012 TCAV Committee**

**Chaplain**
Rev. Fr. Anthony Gnanapragasam
T : (03) 9551 5666
M : 0449 167 990
anthonygnanapragasam@yahoo.com

**President**
Eladious Fernando
T : (03) 9432 3204
M: 0403 476 744
efernando@optusnet.com.au

**Secretary**
S. Mariasegarampillai
T : (03) 9898 9939
M: 0427 427 428
pillaim@iinet.net.au

**Treasurer**
Alfred Reynald
T : (03) 9795 7798
M: 0439 302 597
alfredr@iprimus.com.au

**Vice President**
Jothi Felix 0425 843 182

**Asst. Secretary**
Xavier Godwin 0400 855 598

**Asst. Treasurer**
Manoraj Isidor 0428 851 106

**Editor**
P. Ratheeskanth 0413 916 360

**Religious Secretry (North & South)**
Alfred Pavilupillai 0407 309 755
Lucas Savariyar 0421 448 753

**Welfare Secretary North-South**
Cyril Kulendran 0425 760 328
<South - Position Vacant>

**Committee Members North- South**
1. S.Cornelius 0425 728 839
2. <North Position Vacant>
3. Anandarajan James 0431571 066
4. L. Moses 0423 709 352



TCAV KIDS Zone



Email - tcavinfo@gmail.com
SMS Only - 0468 771 015

தொகுப்பு
சாந்தி சந்திரகுமார்


This page is sponsored by a well wisher

உங்கள் மலலைச் செல்வங்களை ஊக்கப்படுத்துங்கள்! அவர்களுக்கான ஆக்கங்களை நீங்கள் கூட எழுதலாமே?


***அன்பான பிள்ளைகளே அழகான வர்ணபுக்கள் போல, சின்ன பட்டாம் புச்சிகள் போல, மனதை கொள்ளை கொள்ளும் உங்களுக்காக ஒரு சிறுவர் பகுதியை இவ்வேட்டில் வெளியிடுகின்றோம். இதனை வாசித்தபின் இதைப்பற்றிய கருத்துக்களை எமக்கு அறியத்தாருங்கள்.***

## அன்பும் காணிக்கையும் (குட்டிக்கதை)

தம்பி தங்கையரே! பரிசுத்த வேதாகமத்தின்படி எமது முதல் பெற்றோர் ஆதாமும் ஏவாளும் இல்லையா! அவர்களுக்கு காயின், ஆபேல் என இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களில் காயின் ஒரு விவசாயி, தானியங்கள், பழங்கள், மரக்கறி என்பன விளைவிப்பவன், ஆனால் அவன் ஒரு நல்ல மனிதன் அல்ல. தாய் தந்தையருக்கு பணிவில்லாதவனாய், தன் சகோதரனை அன்பு செய்யாதவனாய், நல்ல பழக்கங்கள் அற்றவனாய் இருந்தான்.



ஆனால் ஆபேலோ ஒரு நல்ல மனிதன். கடவுள் பயமும், விசுவாசமும், பெற்றோருக்கு கிழ்ப்படிவுள்ளவனாய், தன் சகோதரனை மிகவும் அன்பு செய்பவனாகவும், அயலவருக்கு உதவி செய்பவனாகவும், நல்ல பழக்கங்கள் உள்ளவனாகவும் இருந்தான். இவன் ஒரு ஆட்டு மந்தை வைத்திருந்தான். ஒரு நாள் காயினும், ஆபேலும் இறைவனுக்கு பலி கொடுக்க மலைக்கு போனார்கள். ஆங்கே காயின் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களையும், பயிர்களையும் இறைவனுக்கு பலி கொடுக்க, ஆபேல் தன் மந்தையில் வளர்த்த ஒரு கொளுத்த ஆட்டுக்குட்டியை பலியாகக் கொடுத்தான். கடவுள் ஆபேல் நல்ல மனிதன் என்பதால் அவனுடைய பலியை ஏற்றுக் கொண்டார். இதனால் பொறாமை கொண்ட காயின் ஆபேலை கத்தியால் குத்திக் கொன்றான்.



***கவிஷான் பிரித்விறாஜ் கதையிலிருந்து தெரிந்து கொண்டது***

தம்பி தங்கையரே! இக் கதை முலம் கவிஷான் பிரித்விறாஜ் தான் எதனைக் அறிந்து கொண்டார் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்.

இக்கதையிலிருந்து கடவுள் சொல்ல வருவது, கடவுள் எம்மை எவ்வாறு குறைவில்லாமல் அன்பு செய்வதுபோல நாமும் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும். அத்துடன் இறைவன் எம்மிடம் காணிக்கையாக எதிர்பார்ப்பது பணம் பொருள் அல்ல மாறாக எமது தூய்மையான மனம், அதை ஏற்படுத்த நான் எனது பெற்றோரையும் மற்றவர்களையும் மதித்து நடந்து, எனது அண்ணன் மற்றும் நண்பர்களுடன் அன்பாகவும் நேசமாகவும் பழகி இறைவனுக்கு ஏற்ற பிள்ளையாக வாழ்வேன். ⁂




பிள்ளைகளே! கிறிஸ்து பிறப்பு விழா நெருங்குகிறது. நத்தார் என்றவுடன் ஞாபகம் வருவது விலையுயர்ந்த பரிசுப்பொருட்கள் அல்லவா!




இவற்றால் மட்டும் நாம் மகிழச்சியடையாமல், எல்லா வல்லமைகளையும் கொண்டுள்ள இறைவன், எம்மேற் கொண்டுள்ள அளவற்ற அன்பினால் தனது வல்லமைகள் அனைத்தையும் துறந்து, ஓர் ஏள்மையான மாட்டுத்தொழுவத்தில் மனிதனாக எம் மத்தியில் பிறந்தார் என்பதற்காக மட்டற்ற மகிழ்சியடைவோம்.

## TCAV Best Christmas Cribs Competition - WIN prizes

**Hi Kids! Join with your family and setup a beautiful and meaningful cribs set for this Christmas. Take a photo and email us.**

**Our judges will visit 5 finalists and choose best 2 cribs sets and give prizes.**





## உங்களுக்கு தெரியுமா?

தம்பி தங்கையரே! நீங்கள் அறிந்து கொள்ள ஒரு சிறு விடயம்

- திருச்சபையை உருவாக்கியவர் இயேசு கிறிஸ்து
- திருச்சபையின் முதற் பாப்பரசர் இராயப்பர்
- தற்போதுள்ள பாப்பரசர் 16ம் ஆசிர்வாதப்பர்

என்பவை உங்களுக்குத் தெரியும்.

எமது திருச்சபையானது தன்னை நெறிப்படுத்த பல சட்டங்களையும், கட்டளைகளையும் உருவாக்கியது. அதில் ஒன்று கடன் திருநாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் முழுப்பூசை கண்டு நற்கருணை உட்கொள்ள வேண்டும் என்பது.

***கடன் திருநாட்கள் நான்கு***

1. தை மாதம் 1ம் நாள் தேவதாயாரின் பெருவிழா.
2. ஆவணி 15ம் நாள் தேவதாயாரின் விண்ணேற்பு விழா.
3. மார்கழி 8ம் நாள் தேவதாயாரின் அமலோற்பவ பெருவிழா
4. மார்கழி 25ம் நாள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழா. ⁂

## Christmas Message from TCAV President Eladious Fernando

Dear brothers and sisters,

I greet you all a Merry Christmas and Prosperous New Year 2013. It is with great pleasure meeting you again in our TCAV Christmas Edition Newsletter.

Yes we staged our "Silver Jubilee and Felicitation Dinner" in an excellent way. We had very good feedback for our "Spring Edition Newsletter" and "Silver Jubilee Function". Great thing is both the holy mass and the felicitation dinner was well attended. I thank all the members, well-wishers, sponsors and especially my committee members for staging this event in an extremely stylish way. ***In this remarkable year, as a president, my main duty is not to plan any new projects, but to complete and fulfil at least some of the visions previous committees and presidents had. This will be my primary focus.***

In this festive season we also look back our homeland, where many of our people have bleak future. I don't think it is necessary for me to explain or remind you all about the prevailing situation in Sri Lanka or generally in the Thamil Areas. TCAV have done many projects in spite of limited resources and volunteers within us. Even though, currently we are working with few NGOs and Government Organisations to focus on current issues such as humanitarian assistance, Vocational and/or Technology Training Possibilities, Accelerated Economic Development in war affected parts of Sri Lanka in conjunction with relevant partners. ***Most.Rev.Bishop Thomas Savundaranayagam's visit and his interactions with many of former congregations and others to whom we were able to obtain audience in Melbourne, Canberra and Sydney has cleared many doubts and made TCAVs relations more closely. During the next few terms, we need to build this network to become more rewarding.***




***As an organisation with 25 years of community service, we have the maturity, courage and vision to work in coordination with other organisations. Maturity and courage alone is not going to convince donors and decision makers.*** Even though, we the Catholics numbers were drop in the ocean, the churches and its counterparts were mostly the immediate point of contact for the helpless Tamils during the ferocity of the war. The churches work to provide assistance to everyone without any distinction as to religion, groupism, but only on the basis of humanitarian needs. TCAV, as the capacity and the foundation through the years to rise to such a level beyond the confines of religion.

| | | |
|---|---|---|
| மேதை ரவீந்திரநாத் தாகூரின் பொன் மொழிகளில் இருந்து... ***"சாலரண்களை திறந்து விடுங்கள், காற்று உள்ளே வந்து போகட்டும்"*** | அறிஞர் அண்ணாவின் பொன் மொழிகளில் ஒன்று..... ***"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்"*** | கவிப்பேரரசு கண்ணதாசனின் முதுமொழிகளில் இருந்து.. ஒரு வரி இங்கே... ***"நான் ஒன்றை ஆதரிக்கவில்லை என்பதன் அர்த்தம், அதை நான் எதிர்கிறேன் என்பதல்ல"*** |

**யார் குத்தியும் நெல்மணி அரிசியாகிவிட்டு போகட்டுமே! என்ற மனப்பக்குவம் நம்மிலே வரவேண்டும்! ஏனெனில்... போரினால் நொந்துவிட்ட எங்கள் உறவுகளுக்கும்... இந்த உலக வாழ்க்கை ஒரு முறைதான்!**

**What is going to be our move forward approach? Are we going to be Confronting or cohesion?**

**We need advice, expertise, inputs from those who think alike and mostly and importantly goodwill from the truncated diaspora.**

**Wishing you merry Christmas and happy new year 2013.** **Eladious Fernando (President TCAV)**

---

**We are focusing on facilitating these projects. These programs will assist under privileged people beyond religion and race under the strict screening process. if you or your friends are keen to contribute on a regular basis please email us.**

| Small (With the help of Well-wishers) Each unit will cost $45-$200/mth- item | Medium in collaboration (With the help of NGO's & Well-wishers) Each unit will cost $800-$2850/project | Large & Long Term Lobbying through AUSAID & NGOs |
|---|---|---|
| a. Early Childhood Learning/ Childcare<br>b. After school tuition for middle school children<br>c. Computer & English Training<br>d. Bicycle Donation<br>e. "Secure the Door" for widows | f. "Train the Trainers" Workshop to coach locals & Expats in Offshore and in Australia.<br>g. Macro & Self Employment Schemes<br>h. Macro Group Employment Schemes<br>i. Shared- Well for cultivation<br>j. "Container Camp" collection of goods | k. Resettlement for Genuine Refugees<br>l. Renovation/New Community Centres<br>m. Building New Preschools<br>n. Establishing Technical Training Centres<br>o. Mobile Mental Health Clinics<br>p. Renovation of Homes (if not under UN) |

# Silver Jubilee Celebration

**Thanks giving Eucharistic Service and Fellowship Dinner**

**Sunday 21st October at 4.30 PM, at St. Andrew's Church, 76 Springs Rd, Clayton South**

**Chief Guest**
**Most Rev. Peter Elliott,** DD MA STD VG EV
*Auxiliary Bishop for the Southern Region*

**Guest of Honour**
**Most Rev. Dr.Thomas Savundaranayagam**
*Bishop of Jaffna, Sri Lanka*

எமது விக்டோரியா தமிழ் கத்தோழிக்க சங்கத்தின் (அவுஸ்திரேலியா) 25வது வருட வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள் அன்மையில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவை, அதி.வண. ஆயர் பீட்டர் எலியட் அடிகளார் பிரதம விருந்தினராகவும், அதி.வண. யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததில் மெல்பேர்ன் கத்தோலிக்கருக்கு ஒரு தனி பெறுமையே. இரண்டு ஆயர்களும் ஆறு குருக்களும் இனைந்து தமிழிலிலும் ஆங்கிலத்திலும் சிறப்புப் பாடல் பூசையை ஒப்புக்கொடுத்தது ஒரு கண்கொள்ளா காட்சி! ஆலயமும், இரவு விருந்துபசார மண்டமும் முற்று முழுதாக நிறம்பி வழிந்தது. இந்த வைபவங்களில் வணக்கத்துக்குரியவர்கள், அவுஸ்திரேலியா-விக்டோரியா அரசியல் மற்றும் சமூக சேவை பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நன்றி இரவு விருந்துபசார வைபவம் எமது தலைவர் திரு எலாடியஸ் பொன்னாந்து அவர்களின் தலைமையில் மங்கள குத்து விளக்கோடும், அவுஸ்திரேலிய தேசிய கீதத்தோடும் ஆரம்பமானது. தலைவர், ஆயர்கள், அரசியல் பிரமுகர் மற்றும் TCAVயின் ஸ்தாபக தலைவர் திரு.ஜோன் பத்தினாதன் ஆகியோரின் சிறப்பு உரைகளும் இடம்பெற்றது. குறிப்பாக யாழ் ஆயரின் நகைச்சுவை கலந்த சிறப்புரை அனைத்து விருந்தினரையும் கவர்ந்தது. நன்றி உரையை எமது செயளாளர் திரு.மரிய சேகரம்பிள்ளை அவர்கள் வழங்கினார். ஒரு இரவு விருந்தாக இருந்தாலும், விருந்தினரை மகிழ்விக்க ஆர்பாட்டமில்லாத கலைநிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பழைய தலைவர்களுக்கு அதி.வண. ஆயர் பீட்டர் எலியட் அடிகளார் நினைவு கேடயங்களை வழங்க, அதி.வண. ஆயர். தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் வெள்ளிவிழா ஆண்டுக்கான செயற்குழுவுக்கு நினைவு கோடயங்களை வழங்கினார். பந்தி அமர்வின் பின், யாழ் ஆயர் ஒவ்வொரு மேசையையும் தரிசித்து மக்களோடு உறையாடுயது மனதுக்கு திருப்தியளித்ததாக பலரும் கூறினார்கள்.

யாழ் ஆயரின் வருகையை பயன்படுத்தி, எமது சங்கம், அவுஸ்திரேலியா-விக்டோரியா அரசியல் மற்றும் சமூக சேவை பிரமுகர்களுக்கான பிரத்தியேக சந்திப்புகளை, சிட்னி-கன்பரா-மெல்பேர்ன் நகரங்களில் ஒழுங்கு செய்திருந்தது. இந்த சந்திப்புகள், இலங்கையில் போருக்குப் பின் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தற்போதைய நிலையை மிகத்தெளிவாக படம்பிடித்து காட்டியதோடு சில புதிய உதவிகளுக்கும் இவை அடிக்கல்லாக அமையும் என நினைக்கிறோம். இதனை மையமாக வைத்து எமது சங்கம் மேற்படி நிறுவனங்களுடன் தொடர்பிலேயே இருக்கும்.சிறிய மெல்பேர்ன் தமிழ் கத்தோழிக்கர் தொகை, மிகச்சிறிய சங்கம், அதிலும் மிகச்சிறிய செயற்குழு உங்கள் ஆதரைவையும் பங்களிப்பையும் எதிர்பார்த்து நிற்கிறது. *வெள்ளிவிழா வைபவத்தின் சில படங்களை உங்களுக்காக தருகிறோம்.*






















SMS இல் இறை மகிமையை பறைசாற்றுவோம்
Please share with us, your experience with God & Prayer request




- My bro is undergoing dialysis in SL & waiting for matching donor. Pl. pray 4 donor and help *Shaminee*
- Our daughter 8yo ws detected wth leukaemia last wk & undergoing treatment at RCH. Pl. pry 2 God to gv strength 2 r ltl girl & take awy this pain from us. * J & D *
- Iraiva! En maganin VCE exam I vazli nadathiyatharku nanRi AandavarE * Private *

Email–tcavinfo@gmail.com SMS Only-0468771015






WE NEED ADVERTISERS!.. OUR CIRCULATION IS OVER 400+ TAMIL FAMILIES & 300+ E-MAILS 400% BIGGER THAN SHOW SOUVENIR & TARGET AUDIENCE






**TCAV Youth** is a section we like to introduce in our newsletter to integrate with our adolescent members.

**PLEASE SEND YOUR ARTICLES ON VIEWS, EXPERIENCE AND SOCIAL ACTIVITIES YOU ARE INVOLVED.**

TCAV E-mail or sms - Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015



Vocational Diary…

## Serving to ~~people~~ GOD in Cambodia

CHARLES MICHAEL sdb

Looking at the underprivileged and the downtrodden, our hearts go out immediately to help them. This attitude is truly benevolent and worthy of all commendation.

When we are moved by these sentiments we indicate that we have transcended beyond looking for our needs as creatures. This is exactly how any child of God would feel.. "to help our neighbour". There were chiefly three hurdles we face when we go to an unfamiliar country. **1) Language 2) Culture 3) Acceptance.**

When we are in our own country we speak to each other and understand each other easily. We take it for granted. Well, when we go to another country it is very different. It is not like going as a tourist to visit the place. We are going to touch the lives of the people. This is demanding. The same goes for the culture. We are one with our culture and so don't realize its intricacies. It is not to be taken lightly because a small glitch in our actions will alter our intention in the minds of the people. And finally, when we go as a tourist, locals will accept us but when we go to teach or help out them it's different.

We must always remember that we will always remain as foreigners in their sight. Now, this is what happens…

***Usually, we go into an underprivileged country with the mindset of giving. We feel we are superior and that they are either suffering or in a lack of facilities or that they need to be taught – with a big brother mentality. This will not work out.***

***The best way to help out is:***

- *To go with a mindset of learning from them. Learn their customs and respect their cultures. We will not be able to do all that we have planned according to our time frame. We must be patient and not judgmental. Give it some time and gradually educate them and help them to make their own decisions. Don't force them with your ideologies. All this will take time and it's no fast food joint. It's got to take its time. Time frames don't go well with changing the nature and behaviour of people.*
- *A good way of imparting knowledge or helping is by educating a few from the people themselves. For example, it is better to educate the teachers of a school in order to improve the quality of education of the students. The teachers would require less time to understand and would be able to continue it even in our absence. The good that we do will go on.* ⁂

## DIGITAL PHOTOGRAPHY WORKSHOP

**(Conducted by Professionals & Amateurs)**



*FOR TCAV YOUTH*

Coming soon during mid-summer

Pl. register your interest via email

Do not regret missing this free session

Learn the diffrence between

Manual & Auto

Light & Appeture

Expose Principle

Don't regret taking under or over exposed shots



- **Formal**
- **Portraits**
- **Using Flash**


Learn more about abstract photography and enjoy the fun



## BRO.CHARLES – "PROFESSION OF PERPETUAL VOWS"

Bro.Charles Arun Michael is one of our young and energetic Tamil Salesians of Don Bosco Brother from South India. He has completed part of his vocation in Cambodia and completing his theological studies in Melbourne.

**Please honour Bro.Charles by attending his "Profession of Perpetual Vows" on 31 Jan'13, 7.30 pm at St. Margaret Mary's Church, 51 Mitchell St, Brunswick.** **– TCAV -**



# தமிழ் கத்தோழிக்க சங்க மங்கையர் குழு
# TCAV Ladies Auxiliary Group

Email – tcavinfo@gmail.com
SMS Only - 0468 771 015

## ஏன் இந்த TCAV Ladies Auxiliary குழு?

எமது TCAV சங்கத்தின் உப சங்கமான TCAV Ladies Auxiliary Group தற்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. North - Mill Park-Bundoora கிளை தனது முதல் Fact Finding கலந்துரையாடலை தொடர்ந்து Workshop ஆரம்பித்து விட்டது. South - Dandenong-Moorabbin கிளை ஆரம்பவேளைகள் TCAV வெள்ளி விழா காரணங்களால் தாமதித்துவிட்டது. அடுத்த வருடம் விடுமுறைகளுக்கு பிறகு ஆரம்பமாகும்.

<u>இதன் முக்கிய நோக்கங்கள்:-</u>

- *TCAV க்கு ஒரு satelite குழுவாக துணைபுரிதல்*
- *விவிலிய மற்றும் செபமாலை பக்தியை எம்மிடையே வளர்த்தல்*
- *எமது சகோதரிகளின் ஆன்ம மற்றும் சமூக நல திட்டங்களை மேம்படுத்துதல்.*
- *எமது இளையோரை(Youth) ஓரளாவுக்காவது எம்மோடு இணைத்தும், அணைத்தும் அடுத்த படிக்கு கொண்டு செல்லுதல்*

இங்கே தலைமையோ, குழுக்கூட்டங்களோ இருக்காது. A casual and informal friendship group.

எமது சங்கத்தை இன்னும் பல ஆண்டுகள் நடத்தி நாம் ஓய்வு பெறும் காலங்களில் ஒரு ஆராதனையோ, விவிலிய வழிபாடோ, திருப்பலியோ, அல்லது ஓய்வு விடுதியில் இளைப்பாற சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் தமிழில் வழிபட கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவதை தடுப்பதற்காக செய்ய வேண்டிய ஆழ்நிலை திட்டமே (Strategic Planning) இது. இந்த தார்மீக கடமையை, தாயாகவும்-தாரமாகவும் இருக்கும் எமது மாதரால், நோகாமலும், ஓசைபடாமலும் நிறைவேற்ற முடியும் என நாம் நம்புகின்றோம்.

ஏன் நீங்களும் கிடைக்கும் நேரத்தில் குழந்தைகளை உங்கள் கணவரிடம் கொடுத்து விட்டோ அல்லது ஒரு cappuccino outing ஆக நினைத்துக்கொண்டோ உங்களுக்கு பயன் தரக்கூடிய சில நிகழ்வுகளில் பங்கெடுக்கலாமே?

சமுகத்துக்கு சேவை செய்யும் அதே வேளையில் எமதும் எமது இளசுகளையும் கவரக்கூடிய கைப்பணி வேளைகளை பழகிக்கொள்வோம். தோழமையையும், ஐக்கியத்தையும் மேலும் வளர்ப்போம்.

விபரங்களுக்கு இந்தப் பகுதில் உள்ள விளம்பரத்தை பார்த்து எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**NORTHERN REGION – MILL PARK**
**Tailoring Style Sewing**
**"Saree Blouse & Churithar"**
Series I running now
**Sorry No Vacancy**
Pl. Contact for 2ND batch commencing APR'13

## Are you interested in following crash workshops

(Workshop Cost Partly Subsidised by TCAV)

**Tailoring Style Sewing****
(Blouse & Churithar Making workshop)




**Cake Icing & Decoration****




**Sugar Craft****
(Cake Décor, Flowers making)



**Airbrush Cake-Icing****



**Food & Vegetable Carving****



**Bible Study & Meditation****



"TCAV Ladies Auxiliary" is about to start series of Workshops in North & South Region for you. The workshops are friendly, <u>member to member exchange style workshops</u> for you to benefit

(** Depending on the participation & help these workshops will be conducted)

**SOUTHERN REGION – DANDENONG**
**LADIES !!**
We like to meet you for fact finding session
Based on meeting outcome, We will make arrangments to organise
the most popular workshop
NORTH & SOUTH ARE TRIAL PROJECTS

**SOUTHERN REGION – DANDENONG**
Interested members please contact us via email.
Group discussion date & venue will be notified

TCAV மாதர்சங்கம் நடத்தும்

# CAKE & SWEET STALL

**At TCAV Christmas Function**

**21-12-2012 6.00pm**

**MADONNA & MARY (NORTH)**
**YASO & MEENA (SOUTH)**



Ladies.. Come and Join Us,
Pl. bring cake or sweet plates
to sell in the stall

திரட்டப்படும் நிதி எமக்கும், எமது இளைஞர்களுக்குமான பல Workshopகள் Dandenong (South) Mill Park (North) ஆகிய பகுதிகளில் நடைபெற உதவும்

**Cakes & Sweet price range**  **between $3 - $8**

## பாசிப்பருப்பு உருண்டை

-மீனா ∴பெலிக்ஸ்




*படத்தில் இருப்பது*
*நடுவில் பாதம் பருப்பு சேர்த்த மாதிரி*

<u>தேவையான பொருட்கள்:</u>

பாசிப்பருப்பு - ¼ கிலோ
சர்க்கரை - ½ கிலோ
ஏலக்காய் - 6
(வறுத்து பொடித்துக் கொள்ளவும்)
நெய் - ¼ கிலோ

<u>செய்முறை:</u>

- வாணலியல் பாசிப் பருப்பை போட்டு வாசனை வரும் வரை நன்கு வறுத்துக் கொள்ளவும்.
- நன்றாக ஆறவைத்து பின் மிக்ஸியில் நன்கு அரைத்துக் கொள்ளவும்.
- சர்க்கரையை தனியாக பொடித்துக் கொள்ளவும்.
- சல்லடையில் இரண்டையும் சேர்த்து சலித்துக் கொள்வும்.
- வாணலியில் நெய் ஊற்றி நன்கு சூடானதும், சலித்த கலவை, ஏலக்காய் பொடித்தது இவற்றை சேர்க்கவும், பிறகு அதை உருண்டையாக செய்து கொள்ள வேண்டும்.
- இனிப்பான பாசிப்பருப்பு உருண்டை தயார். குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.

⊠

## "Happy Face Santa" Egg Savoury

- நெட்டனியா டி கொஸ்டா



*படத்தில் இருப்பது முட்டையில்லாமல் பாணில் மட்டும் செய்த மாதிரி*

<u>தேவையான பொருட்கள்: (6 பங்குகள்)</u>

Oval வடிவமாக பாண் துண்டுகள் - 6
முழு அவியல் முட்டை - 3
முழு அவியல் உருளைக்கிழங்கு – 1 ½ பெரியது
கட்லட்/பேஸ்ட்ரிக்கு செய்யும் கலவை - அளவாக
நெய் - 100 gms.
உப்பு, வெள்ளை மிளகு தூள் - தேவைக்கு ஏற்ப
உணவு நிறக்கலவை – சிவப்பு

செய்முறை:

- முட்டையை நெடுக்காக (Oval) வெட்டி, அதன் வெள்ளைகருபகுதியை தனியே பிரித்து கட்லட் செய்யும் கலவையை நிறப்பவும்
- நன்கு வெந்த மஞ்சல் கருவுடன் கிழங்கு, உப்பு, நெய், வெள்ளை மிளகு சேர்த்து நன்றாக கலந்து Icing பதத்தில் தயார் செய்யவும்.
- இந்த கலவையை 2 பகுதியாக பிரித்து 1 பகுதியை சிவப்பாகவும், மற்றைய பகுதியை நிறம் எதுவும் சேர்க்காமலும் வைக்கவும்.
- Oval வடிவமான பாண் துண்டுகளில், நிறப்பிய பக்கம் படும் படியாக பாதி முட்டைகளை வைக்கவும்.
- சிவப்பு கலவையை நத்தார் தாத்தா தொப்பி போலவும், நிறம் இல்லாத கலவையை பெரிய தாடி, கண்புருவம் போல் piping செய்யவும்.
- உடைத்த கடுகை இரு கண்கலாகவும், வாய் இதழ்களை சிவப்பு உணவு நிறக்கலவையாலும் அழகு படுத்தவும்.

⊠

## XMax' பால் சாக்லேட்

-மீனா ∴பெலிக்ஸ்



தேவையான பொருட்கள்:
பால் பவுடர் - 2 டேபிள் ஸ்புன்
கோகோ - 1 டேபிள் ஸ்புன்
சாக்லேட் பவுடர் - 4 டேபிள் ஸ்புன்
ஐஸிங் சர்க்கரை - 4 டேபிள் ஸ்புன்
எலுமிச்சை, ஆரஞ்சு ஜீஸ் சில துளிகள்.
லிக்விட் குளுக்கோஸ் - ½ தேக்கரண்டி (எசன்ஸ் கடைகளில் கிடைக்கும்)

<u>செய்முறை :</u>

- எல்லா பொடிகளையும் ஒன்றாக 2 அல்லது 3 முறை கட்டி இல்லாமல் சலித்துக் கொள்ளவும்.
- ஆரஞ்சு ஜீஸ், லிக்விட் குளுக்கோஸ் சிறிதளவே தண்ணீர் தெளித்து கலந்து பதமாக சப்பாத்தி மாவு போல பிசைந்து கொள்ளவும்.
- மாவு மிகக் கெட்டியாகவும் வரக்கூடாது. உருண்டைகளாக தயாரிக்கும் போது உடைந்தும் விடக்கூடாது. பதமாக பிசைய வேண்டும்.
- நன்கு பிசைந்து கொண்ட பின்னர், காய்ந்து விடாமல் இருக்க பிளாஸ்டிக் உறையில் போட்டுவைக்கவும்.
- நத்தார் பண்டிகைகால அச்சுகளில் (Moulds) மிகக் குறைவாக நெய் தடவி, அதில் பிசைந்த சாக்லேட் கலவையை அழுத்தி அச்சு வார்க்கவும்.
- குளிர்சாதனப் பெட்டியில் குறைந்தது ஒரு மணி நேரம் குளிரவைத்து, சுத்தமான மேசையில் தட்டினால் XMax பால் சாக்லேட் ரெடி.
- <u>வேறுமுறை:</u> மாவுடன் பொடியாக அரிந்த பாதாம் முந்திப்பருப்பு அல்லது உலர்ந்த திராட்சை சேர்க்கலாம். ⊠

TCAV

# கிறீஸ்தவமும் வழிபாடும்

**தமிழில் திருப்பலி**

**மாதத்தின் 2வது ஞாயிறு – 3.30 pm St.Gerard's Church, Dandenong North**

**மாதத்தின் 3வது ஞாயிறு – 4.00 pm St.John's Church, Heidelberg**

உங்கள் ஆக்கங்களை முடிந்தால் தமிழிலே தட்டச்சு செய்து அனுப்பவும். கட்டுரைகள் வேறு எங்கிருந்தாவது பெறப்பட்டால், அதனையும் குறிப்பிட மறக்க வேண்டாம்

Please send your articles and messages via e-mail or sms to us Email – tcavinfo@gmail.com SMS Only - 0468 771 015

இறை வார்த்தைகள், தேவ கருத்துக்கள், செய்திகள், அறிக்கைகள், விவிலிய கூட்டங்கள் பற்றி பகிர்ந்து கொள்வோம்.

**தவக்கால – உயிர்ப்பு ஞாயிறு வெளியீடு தயாராக ஆக்கங்கள் தேவை**

## கடவுள் நம்மோடு..! இவர் இறைமகனா? மனுகனா ?

**25 மார்கழி 2012**

நன்றி.. கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம்

மானுட இனம் காலம் காலமாகக் காத்திருந்த மீட்பு ஆண்டவர் இயேசுவின் பிறப்பினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. தாவீதின் ஊரிலே மெசியா பிறந்திருக்கிறார் என்ற நற்செய்தியானது, யூ த மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலகின் எல்லா மக்களினத் தாருக்கும் உரித்தான ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

ஆண்டவர் இயேசு விண்ணகத்தில் தூதர்கள் மத்தயில் மாட்சியில் வீற்றிருப்பதை விட மாடடைக் குடிலில் மாந்தர் மத்தியில் பிறப்பதையே பெரிதாகக் கருதினார். தாழ்ச்சியின் உறவாகிய ஆண்டவர் இன்று நமக்கு எளிமை, தாழ்ச்சி, இறைசித்தத்த்திற்கக் கீழ்ப்படிதல் என்னும் பாடங்களை எடுத்துரைப்பதற்காக நம்மோடு வாசம் செய்ய வருகிறார். இம்மானுவேல் என்ற இறைவனாக, நம்மோடு வாசம் செய்ய வந்திருக்கும் அவர் நம்மிடம் இறையன்பும் பிறரன்பும் பெருகிட வேண்டும் என விரும்புகிறோர்.

**இதுவே நாம் இயேசு பாலனுக்கு அளிக்கும் பிறந்த நாள் பரிசாகும்.!**

முதல் வாசகம் - இசையா: 62: 11-12

**உலகின் கடைக்கோடி வரை ஆண்டவர் பறைசாற்றியது: மகள் சீயோனிடம் சொல்லுங்கள்: இதோஉ உன் மீட்பு வருகின்றது...**

இரண்டாம் வாசகம் - சங்கீதம் (திருப்பாடல்கள்) 97:1,6, 11-12

1 **ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் பூவுலகம் மகிழ்வதாக!..**

6 **வானங்கள் அவரது நீதியை அறிவிக்கின்றன..**

11 **நேர்மையாளருக்கென ஒளியும் நேரிய...**

நற்செய்தி வாசகம் - லூக்கா 2:15-20

15 **வானதூதர் அவர்களைவிட்டு விண்ணகம் சென்றபின்பு, இடையர்கள் ஒருவரையொருவர்நோக்கி...**

### நாம் கிறிஸ்மஸ் கொண்டாடலாமா?

சில கிறீஸ்தவ நண்பாகளிடையே, நாம் கிறிஸ்மஸ் விழாவினைக் கொண்டாடக்கூடாது என்றும் இது ஒரு “சூரியக் கடவுளின் திருவிழா” என்றும் வாதிப்பார்கள். இவர்களுக்கு நாம் என்னதான் விளக்கம் அளித்தாலும் அவாகள் அதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எனினும் நம்மவர்கள் தெளிவு பெறுவதற்காக இந்தக் கட்டுரை இடம் பெறுகின்றது.

கிறிஸ்மஸ் கொண்டாடுவதும் கொண்டாடாதிருப்பதும் அவரவர் சொந்த விருப்பம். ஆனால் அதனை அவர் மற்றவர்கள் மேல் திணிப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க இயலாது. அதிலும் ஈராயிரம் ஆண்டுகளாக கிறித்தவ உலகம் முழுவதும் ஆண்டவரின் பிறப்பை குதூகலத்துடன் கொண்டாடும் வேளையில் சில அரைவேக்காட்டு நபர்கள் அவர்களைக் குழப்புவது கண்டிக்கத்தக்கது.

முதலாவதாக, நாம் நமதோ அல்லது நமது பிள்ளைகளதோ பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுவது இல்லையா? நமதாண்டவர் பிறந்த தினம் துல்லியமாகக் கணக்கிட இயலாவிட்டாலும் அதற்கென ஒரு நாளை வைத்துக்கொள்வது பிழையாகாது. உண்மையில் பல்வேறு திருச்சபைகள் பல்வேறு தினங்களை கொண்டாடுகின்றார்கள். ”டிசம்பர் 25 இல்லாவிட்டால் நீங்கள் வேறொரு தினத்தை வைத்துக்கொள்ளலாம். ஆனால் அந்தத் தினம்தான் சரியான தினம் என்று எப்படி எண்பிப்பீர்கள். இதிலும் வாதப் பிரதிவாதங்கள் வரலாம். எனவே இயேசு பிறப்பு விழாவைக் கொண்டாடாமல் விட்டு விடலாம் என்று சொல்வீர்கள்.” இயேசுவின் பிறப்பை கொண்டாடக்கூடாது என்று சொல்பவர் யாராக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் அது தீயவனிடமிருந்து வரும் யோசனை என்பதை யாரும் மறுக்க இயலாது.
வழமையாகக் கோயிலுக்குப் போகாதவர்கள்கூட நத்தார் திருப்பலிக்குப் போவார்கள் அல்லவா? வழிபாட்டுக்கு ஒருவரை அழைத்துவரும் எந்த ஒரு காரியமும் போற்றுதற்குரியதே. ***கிறிஸ்மஸ் என்ற சொல் பைபிளில் இல்லை என்பது உண்மையாயினும் ஆண்டவருடைய பிறப்பும் அதனைச் சார்ந்த மற்ற உண்மைகளும் நிச்சயமாக பைபிளில் காணப்படுகின்றவையே. அன்னை மரி, சூசை, இடையர்கள், ஞானிகள், ஏரோதன் எல்லாருமே பைபிள் கதாபாத்திரங்கள்தான். கற்பனையில் உதித்தவர்கள் அல்லர். கிறிஸ்மஸ் நிகழ்வு இல்லாவிட்டால்..இரட்சிப்பு. இல்லை!***

ஆனால் பைபிளில் கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டும் என்று கூறவில்லை என்பார் நண்பர். அப்படியானால் ஈஸ்டரையும் நாம் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிடாததினால் அவர் கொண்டாடாமல் இருப்பாரா? ”ஈஸ்டர்” என்ற சொல் பிற இனத்தவர்களுக்கு உரித்தான சொல் என்பாரா? அப்படியானால் நமது மொழியில் இருக்கும் சொற்களில் பல பிற இனத்தவர்கள் மத்தியில் உதித்தது என்பதால் மொழியையே பயன்படுத்த இயலாமல் போய்விடும். இராமநாதபுரம் என்ற சொல்லை நாம் அகற்றி விட வேண்டுமா? அதுபோக பைபிளில் கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டாம் என பைபிள் கூறவில்லையே. அப்படிப் பார்த்தால் இயேசுவே பைபிளில் கூறப்படாத விழாவைக் கொண்டாடி இருக்கிறார் தெரியுமா?
”எருசலேமில் கோவில் அர்ப்பண விழா நடந்து கொண்டிருந்தது. அப்போது குளிர்காலம். கோவிலின் சாலமோன் மண்டபத்தில் இயேசு நடந்து கொண்டிருந்தார்” (யோவான் 10:22-23). இந்த அர்ப்பண விழாவை ஹனுக்கா (Hannukkah) என்று அழைப்பார்கள். இந்த விழா பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் குறிப்பிடப்படவே இல்லை. இது மக்கபேயர் காலத்தில் உருவாகிய ஒரு விழா. இந்த மறு அர்ப்பண விழாவானது ஆலயத்தில் புதுமையான முறையில் 8 நாட்களுக்கு எரிந்த எண்ணெய் பற்றிய ஒன்று. பழைய ஏற்பாட்டுக் கடைசி தீர்க்கதரிசி புத்தகம் எழுதிய பின்னர்தான் மக்கபேயர் காலம் வருகின்றது. எனவே பழைய ஏற்பாடு முடிந்தபின்னர் ஏற்படுத்தப்பட்ட விழா இது. இதில் இயேசு கலந்து கொண்டார் என்றால் பைபிளில் இப்படிக் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிடாத விழாவை நாமும் கொண்டாடலாம்தானே. ■

வாராந்த நற்செய்தி வாசகங்களும் அதன் கத்தோலிக்க விளக்கங்களும் விரைவில் உங்கள் வலம் வரும்



மரித்த ஆத்துமாக்கள் நினைவு

**திரு. Sandy Newman** பிரைட்றன்
- திரு. டோமினிக் சந்தியாப்பிள்ளை அவர்களின் தமயன்

**திருமதி. தாசம்மாள் சவேரியார்** கன்னியாகுமரி தமிழ்நாடு
- திரு.லூக்காஸ் சவேரியார் அவர்களின் தாயார்

**திரு. சின்னராசா மனோகரன்** ஒல்லாந்து
- திரு. ஜேம்ஸ் கருணாகரன் அவர்களின் தமயன்

**திரு. இன்னாசிமுத்து மரியதாஸன்** நாரந்தனை, இலங்கை
(Retired Principle of St Joseph's College Bandarawella & Vice Principle of St Hendry's College Illavalai)
- திரு. வில்லியம் இராஜேந்திரம், டொரீன் அருள்நேசதாஸன் அவர்களின் மாமனார்

உங்கள் அறிவித்தல்களை E-Mail முலமாக எமக்கு தெரியப்படுத்துங்கள்

# அறிவியுங்கள் அறிவியுங்கள்

நிர்மலா அல்போன்ஸ்



**மார்கழி-மாதம்,** மாதங்களில் மகிமை நிறைந்த மாதம் மனதிற்கு மகிழ்ச்சியு'ட்டும் காலம். உலகமெங்கும் விழாக் கோலம். "இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக் குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறிய காலம்.

கிறிஸ்துமஸ் - சிறியவர் முதல் பெரியவர் வரை மகிழ்ச்சி மனதை தாலாட்டுகிறது. பிரிந்திருந்த உறவுகள் ஒன்று சேர்தல், பரிசுப் பொருள் பரிமாறுதல், விடுமுறை நாட்கள், வகை வகையான இனிப்புகள், புதிய ஆடை ஆபரணங்கள் என ஒவ்வொன்றும் மகிழ்சியைக் கூட்டிக் கொண்டே போகிறது.

2 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்று, இறைமகன் இயேசு பாலகனாய் பிறந்த அந்த புனித இரவை மனத்திரைக்கு கொண்டு வருவோம். மாட்டுத் தொழுவம் - மரியாவும், யோசேப்பும் அருகிருக்க தீவனத் தொட்டியில் - இறைமகன் இயேசு. இடையர்கள் - மந்தைகளுக்கு காவல் காத்துக் கொண்டிருக்கின்றனர். வானதூதர் இவர்களுக்கு தோன்றி - எல்லா மக்களுக்கும் பெரும் மகிழச்சியூட்டும் நற்செய்தியை அறிவிக்கின்றார், விண்மீன் வழிகாட்ட, ஞானியர் மூவரும் வீட்டிட்குள் போய், குழந்தையை கணடார்கள்.

**அந்த புனித இரவிலே உலகமே நித்திரையில் இருந்த பொழுது நடைப்பெற்ற ஒரே செயல்! அறிவித்தல்!, அறிவித்தல்!**
**வானதூதர்.. இடையர்களுக்கு அறிவித்தார்!**
**நட்சத்திரம் ஞானிகளுக்கு வழிக்காட்டியது!**

**இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு!**

**இன்று கிறிஸ்துமஸ் என்றால் என்ன?**

கிறிஸ்துமஸ் தாத்தா, மரம், நட்சத்திரம், வண்ண விளக்குகள், பரிசுப் பொருள் பரிமாற்றம், அழகிய தோரணங்கள், இனிப்புகள், இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்குள் அன்று வானதூதர் அறிவித்த நற்செய்தி மறைந்துப் போய்விட்டது. மீண்டும் இந்த நற்செய்தியை அறிவிக்க இறைவன் உன்னையும், என்னையும் அழைக்கின்றார்.

பரிசுப் பொருள் வாங்க கடை வீதிக்கு சென்று கார் நிறுத்த இடம் தேடி சுற்றி சுற்றி வரும் மனிதனிடம் அன்று மரியாளும், சூசையும் இயேசுவைப் பிறப்பிக்க குடில் தேடி சுற்றி சுற்றி வந்ததை **அறிவிப்பாயா?**

பாவங்களுக்காய் பலிக் கொடுக்கப்படும் ஆடுகளைக் காவல் காத்துக் கொண்டிருந்த இடையர்களிடம் தான், தன்னையே பலிகொடுத்து மனிதக் குலத்தை மீட்க இறைவனே பாலகனாய் பிறந்திருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டது என்பதை மீண்டும் **அறிவிப்பாயா?**

காலுறைக்குள் பரிசுப் பொருளைத் திணிக்கும் மனிதனிடம் அன்று கடுங்குளிரிலே உடுத்துவதற்கு ஒரு சட்டையின்றி, துணியிலே சுற்றப்பட்டு, தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டிருந்த பாலனைப் பற்றி **அறிவிப்பாயா?**

**நீ கூவப் போகும் இந்த அறிவிப்பே!**

**இயேசு பாலகனுக்கு தாலாட்டாய் இருக்கும்** ⁂

# எமது ஞானதந்தையின் செய்தி..

## MESSAGE FROM OUR CHAPLAIN

**அன்புமிக்க** உறவுகளான மெல்பன் வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கும், விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்க உறுப்பினர்களுக்கும் எனது அன்பும் கருணையும் கலந்த கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் கூறிக்கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலக உயிரினப் படைப்புகள் எதுவாக இருந்தாலும் அது தன் சந்ததியைத் தன் சாயலாக உருவாககுவதிலேயே அதித பெருமிதம் கொள்ளும். ஆனால் எம்மீது அளவு கடந்த அன்பை வைத்திருக்கும் இறைவனால் மட்டுமே தன் மகனை, மனித சாயலில், ஒரு அதியுயர் படைப்பாக, உலகுக்கு கொடுக்க முடிந்தது. ***இதுவே மனுக்குலத்தை மீட்டு "இறைவன்-மனிதனவ் என்ற பாலத்தை ஒரு கிறிஸ்து பிறப்பில் தந்த நம் இறைவனின் மிகச்சிறந்த பரிசு.***

**ஒரு பரிசுக்கு பரிகாரம் வேண்டும்!**

அதைத்தான் ஏழையின் (அல்லல் படுவோரில்) வடிவில் என்னைக் காணும்போது, கைமாறாக செய்யச் சொல்கிறார் நம் தந்தை.

எமது 25வது வெள்ளி விழா நிகழ்ச்சியில் எனது ஆயரை அழைத்து பெருமை சேர்த்ததில் மிக்க மகிழ்ச்சி. யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரும் எங்கள் மெல்பன் மக்களோடு வெள்ளி விழாவில் ஐக்கியமானதில் மிகுந்த திருப்த்திப்பட்டார். விழா பூசை-நிகழ்ச்சிகளை மிக குறுகிய காலத்தில் சிறப்பாகவும் அம்சமாகவும் நிறைவேற்றிய தலைவருக்கும்-செயற்-குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

***வண. பிதா. அந்தோனி ஞானப்பிரகாசம்***
***தமிழ் ஆன்மகுரு*** ⁂






**HAPPY BIRTHDAY**

Please email special birthdays such as
1st, 18th, 21st, 50th, 60th, 75th and above










# திரைப்பட பாடல் மெட்டில் அமைந்த நத்தார் ஒளி விழா பாடல்கள்

*கிறிஸ்தவ மக்களிடையே, பொதுவாக சினிமா பாடல்கள் திருமறையுடன் கலப்பது, சற்று எரிச்சல் தருவதாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனாலும் சிலவருடங்களாகவே முன்னனிப் பாடகர்கள் ஜனரஞ்சக சினிமா பாடல்களை பல்வேறு மத இறை இசைப்பாடல்களாக தரும்போது அதை தலையசைத்து ரசிப்பதை காண்கிறோம். விரசமான பாடல்களை தவிர்த்து இசையில் லயிக்கக்கூடிய எந்தப்பாடலையும் எழுதுவதோ படிப்பதோ தவறல்ல. ஆனால் இவை ஆயரின் திருமறைக் குழுவின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு (imprimatur) அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஒரு திருப்பலியில் இனைத்துக்கொள்ள தகுதி பெறும்.*

*எனது கல்லூரி நாட்களில் நத்தார் நிதி சேகரிப்புக்கு எனது நண்பர்களுடன் நடத்திய Carol Visit'sக்காக நான் எழுதிய பல பாடல்களின் ஒரு சிறு மாதிரியே இது. இந்த பாடல்களை, நீங்களும் எந்த நிகழ்ச்சிகளிலும் தாராளமாக படிக்கலாம். நிச்சயம் என்னைப்போல உங்களையும் பழைய நினைவுக்கு கொண்டு செல்லும் இந்த Everloving & Evergreen மெட்டுக்கள். - எலாடியஸ் பர்னாந்து -*

மெட்டு - அள்ளித்தந்த பூ மி பாடியவர்-மலேசியா வாசுதேவன்
படம் - நண்டு நத்தார் புது வரிகள்: எலாடியஸ்

### பள்ளி கொள்ளும் பாலன்

ம்...ம்.....ம்..ம்...
பள்ளி கொள்ளும் பாலன் ராஜன் அல்லவா
சொல்லி வைத்த தேவன் தந்தை அல்லவா (2)a
பாடுவோம் ஆடுவோம் கானங்கள்..
இனி ஆனந்தம் ஆரம்பம் வாருங்கள் (2)b... பள்ளி..

தேடி வந்த மூவர் யார் யாரோ...? செபங்கள் தபங்கள் தானோ..?
ஆசை காசை தேடும் மாந்தர்களே.. துன்பங்கள் சோகங்கள் ஏனோ..?
கறைந்து ஓடும் கவலைகள்... நிறைந்து சேரும் அமைதிகள்..
உறைத்த தேவன் உனக்கும் எனக்குமே
உலகில் மகனாய் பிறந்து உதித்தான்.. (2) & பள்ளி..

கானம் செய்த தூதர் யார் யாரோ..? மண் மணி ராஜனின் ஊரோ..?
காவல் செய்த மந்தையின் இடை குலமே..
எழிமையின் தோரணம் தானோ?
பிரிந்து போகும் பாவங்கள் உருதியாகும் வாழ்வுகள்
பிறக்க வேண்டும் புதிய உறவுகள். பழைய பாவம் இனியுமில்லை
(பள்ளி)

மெட்டு - இளைய நிலா பொழிகிறதே பாடியவர்-S.P.B
படம் -பயணங்கள் முடிவதில்லை நத்தார் புது வரிகள்: எலாடியஸ்

### இதயமிது மகிழ்கிறதே

இதயமிது மகிழ்கிறதே இறைமகனை பணிகிறதே
பரலோக ராஜன்.. பரிபாலனே.. உதித்தான் இங்கே. பாரிலே (இதயமிது)

கடும் குளிரில் பணி மழையில் கன்னி மரி மடியினிலே
முகம் புதைத்து அகம் மலர்ந்து இறை மகனாய் துயில் தழுவ (2)

வான வீதியில் தூதர் ஊர்வலம் காணும் போதிலே கானம் மேலிடும்
விண்வெளியில் விதைத்தவர் யார் வால் மணிகள்?
இதயமிது மகிழ்கிறதே
பரலோக ராஜன்.. பரிபாலனே.. உதித்தான் இங்கே. பாரிலே
இதயமிது மகிழ்கிறதே

மூவரசர் அலைகிறதேன் முகவரிகள் தொலைத்தனரோ?
முகவரிகள் தவறியாதால் முள் முடியும் அவர் நிலையோ? (2)
வான வீதியல் தூதர் ஊர்வலம் காணும் போதிலே கானம் மேலிடும்
விண்வெளியில் விதைத்தவர் யார் வால் மணிகள்? (இதயமிது)

மெட்டு-தென்னங்கீற்று ஊஞ்சலிலே பாடியவர்-P.B. ஸ்ரீனிவாஸ்- ஜானகி
படம் -பாதை தெரியுது பார் நத்தார் புது வரிகள்: எலாடியஸ்

### வின்மணிகள் வானத்திலே

விண்மணிகள் வானத்திலே.. வானவர் கூட்டம் கானத்திலே
பாலன் ஜேசு பாரிலே, அவர் பவனி வருகிறார் நேரிலே
பாலன் ஜேசு பாரிலே, அவர் பவனி வருகிறார் நேரிலே
ம்..ம்.. (2)

ஆ..ஆ.... ஆ....ஆ.... (பெண்)
ஆ..ஆ.... ஆ....ஆ.... (ஆண்)

தூவும் பணி ஊதக்காற்று எங்கிருந்தோ கூவுது
இடையர் கூட்டம் வியக்குது இளம் கன்று வனங்கி குவிக்குது
(வின்மணிகள்)

நீல வானில் வெள்ளி மீன்கள் பாதை காட்டி போகுது (2)
மூவர் சேனை தவிக்குது தொடு வானில் இறங்கி அழைக்குது (2)
(வின்மணிகள்)

மெட்டு – நீ வருவாயென நான்.. பாடியவர்- கல்யாணி மேனன்
படம் - சுஜாதா நத்தார் புது வரிகள்: எலாடியஸ்

### நீ மலர்ந்தாய் இந்த பாரினிலே

நீ மலர்ந்தாய் இந்த பாரினிலே
நாம் மகிழ்ந்தோம் உம் பிறப்பினிலே (2)

கருமை போக்கிடவும் பெருமை சேர்த்திடவும்
வறுமை நீக்கிடவும் கொடுமை போக்கிடவும்
அழிவை அகற்றிடவும் அமைதி காத்திடவும்
வாராயோ.......... (நீ மலர்ந்தாய்)

படி நண்பா தமிழ்ப் பாட்டு அவன் துயிலாக இன்று (2)
செவிக்கின்பம் தரும் பாடல் அது ஆராரோவென்று (2)

அமுத மழலையிலே தினமும் நனையவிட்டு
அழைத்த கரங்களிலே இணைத்து இதழ்கள் கொட்டு
நினைத்த நேரமெல்லாம் நிறைந்த புகழ்ச்சி சொல்ல
வாராயோ......... (நீ மலர்ந்தாய்)

# The Tamil Catholic Association, Victoria

P.O. Box 481, Rosanna, Victoria 3084

# Newsletter

Christmas Edition December 2012

If undelivered please return to:
**Tamil Catholic Association of Victoria**
**P.O.Box 481**
**Rosanna, Vic 3084**

Print Post Approved 16
PP33077 / 0010

## PLEASE EMAIL OR POST

## THIS NEWSLETTER TO YOUR FRIENDS IN AUSTRALIA & OVERSEAS